ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

10.04.2025

1. பாரப்பா என் படைகள் விரிந்தோங்க
பாருலகில் சன்மார்க்கம் சிறந்தோங்கும்
கூறப்பா ஆறுமுகா அரங்கா என
குவலயமே கைக்குள் வசமாகும்

2. ஆகுமெனக் கூறி அரங்கன் யானும்
அறிவிப்பேன் குரோதி சேல் திங்கள்
வகைபட சதுர் குருவார அருளாசி
வழங்குவேன் உலகோர் நலம்பெற

3. நலம் பெற ஞானிகள் வாழுகின்ற
ஞானசபை பிரணவக் குடிலை
வலம்வர வந்து சேவிக்க
வந்த நோக்கம் விளங்குமப்பா

4. அப்பனே அரங்கமகான் எந்தன்
ஆற்றல் மிக்க சோதி தரிசனம்
காப்பாக வேண்டிக் கண்டிட
காண்போர் எந்த ஞானியை எண்ணி

5. எண்ணி செபதபம் செய்கிறாரோ
என்வழி அந்த ஞானிகளின்
வண்ணமிக்க காட்சி ஆசியாக
வருவோர் கண்டு மகிழ நேரும்

6. நேருமைபட குடிலின் அருளமுது
நல்கி ஒருமுறை உண்டாலே
வறுமை போக்கி அவர்களின்
வாழ்வை வளமாக்கி அருள்வேன்

7. அருளவே பிரணவக் குடிலின்
அன்னதானம் மகத்துவமானது
தருமத்தில் பொருளுதவி செய்து
தானாக முன்வந்து சரணாகதி

8. சரணாகதி கொண்டு விடுகிறாரோ
சார்ந்தவர்கள் நிலைகள் மாறி
சரணாகதியால் ஞானிகள் துணை
சர்வபலமாகி மாறி தேற்றம் கிட்டும்

9. கிட்டுமே கலி இடர்களை கடக்கும்
குருவருள் குமரன் அருள்பலமாகி
கட்டங்களை எல்லாம் வென்று
கலிதனில் மேன்மைகள் அடைவர்

10. அடையவே அரங்கன் காட்டும்
அற்புத வழி ஆறுமுகனார் வழி
தடையற வந்து ஏற்று நன்கு
தருமவழி நின்றால் போதுமப்பா

11. அப்பனே எல்லா சித்திகளையும்
அடுக்கடுக்காய் வழங்கி காப்பேன்
மூப்பு நரை திரை அண்டாதபடி
முழுமைபெற்ற ஞானிகளாக்குவேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி